திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, இந்த இரண்டு கப்பல்கள் ரத்து செய்யப்பட்டிருப்பதால் எத்தனை ஹாஜ் பிராயணிகள் அதனால் பம்பாயிலிருந்து மீண்டும் தமிழ் மாநிலத்திற்குத் திரும்பி வரவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணிக்கை எத்தனை? அவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிற காரணத்தினால், அவர்களுக்கு பம்பாயில் டிக்கட் கிடைப்பது அரிதாக இருந்து, அவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று தகவல் வந்திருக்கிற காரணத்தினால் ஒரு தனி ரயில் விட்டு அவர்களையெல்லாம் ஒட்டுமொத்தமாகத் தமிழ்நாட்டுக்கு அனுப்பும்படியாக மத்திய அரசுக்கு இந்த அரசு பரிந்துரை அனுப்பி உடனடியாக ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: எத்தனை ஹாஜ் பிரயாணிகள் என்கிற விவரம் இல்லை. என்றாலும், ஏற்கனவே அவர்கள் அனுமதிக்கப்பட்டவர்கள். 7-ந் தேதி, 9-ந் தேதி புறப்படுகிற கப்பல்களை ரத்து செய்த காரணத்தினால் அவர்கள் மீண்டும் பம்பாய்க்கு வர வேண்டாம் என்று அரசாங்கத்தின் மூலமாகவும் பத்திரிகையின் மூலமாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறார்கள். தனி இரயில் பற்றி என்னிடத்தில் குறிப்பு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுகுறித்து எழுதியனுப்பினால் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கலாம்.

திரைப்படத் தணிக்கை வாரியம் அமைப்பு

*** 294 வினா—திரு. ரா. ரா. முனுசாமி:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்தப் பகுதிக்குத் திரைப்படத் தணிக்கை வாரியம் அமைப்பது குறித்து, மத்திய அரசு மாநில அரசைக் கலந்து செயல் படுகிறதா?

(இ) ஆமெனில், அதுபற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) இந்த வினா எழவில்லை.

திரைப்பட நடிகர்களின் வருமானம்

*** 295 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் திரைப்பட நடிகர்களின் ஊதியத்தைக் கட்டுப்படுத்த ஏதேனும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இல்லை. திரைப்படக் கலைஞர்கள் வருவாய்க்கு மேல் வரம்பு விதிப்பதற்கு இந்த அரசுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை.